www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

17.09.90

கிண்ணம் 1 எண்ணம் 9

புரட்டாதி




## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

## CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எண்ணம் 9

அன்புச் சிறுவர்களே,

வினா விடைப் போட்டிகளின் முடிவுகளும், பரிசு பெற்றவர்களின் விபரங்களும், இதில் வெளிவருகின்றன. உங்களில் பலர் ஆக்கங்களையும், படங்களையும் வரைந்து அனுப்பி இருக்கின்றீர்கள். உங்கள் முயற்சிகளை இன்னும் ஊக்குவிக்கவும், எமது பரிசுத் திட்டத்தை விரிவாக்கவும் விரும்புகின்றோம்.

அடுத்த இதழில் இருந்து "அமுதம் சிறுவர் வட்டம்" என்னும் ஒரு பகுதியை தொடர எண்ணியுள்ளோம். அதில் உங்களுடைய ஆக்கங்களும், உங்களைப் பற்றிய விபரங்களும் இடம் பெறும். கறுப்பு + வெள்ளைப் புகைப்படத்துடன் உங்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

— ஆசிரியர் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெட்டவர் சிநேகிதம்

ஒரு காட்டில் திடீரென த்தீ பிடித்துக் கொண்டது. பல மிருகங்கள் இறந்தன. ஒரு பெண் குரங்கு தப்பி அடுத்த காட்டிற்குச் சென்றது. அக் காட்டின் அருகே ஒரு சிறிய ஊர் இருந்தது. அவ்வூரில் ஒரு பெண்பூனை வாழ்ந்து வந்தது. பெண் குரங்கைக் கண்ட பெண்பூனை அதனுடன் சிநேகிதம் கொண்டது.

இருவரும் நல்ல சந்தோசமாக வாழத் தொடங்கினர். பெண்பூனை களவெடுத்துத்தான் சீவியம் நடாத்திவந்தது. ஆனால் பெண்குரங்கிடம் தன் தொழிலைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

எப்படியும் பெண்குரங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் தன்னுடைய தொழிலில் ஈடுபடுத்த எண்ணியது; அந்தப் பெண் பூனை.

ஒரு நாள் தன் சிநேகிதிக் குரங்கிடம் "நாங்கள் என்னமாதிரி வேடம் போடுகின்றோமோ அது தான் முக்கியம் எமது தொழில் எதுவாகவும் இருக்கலாம். நான் ஏன் இந்த உருத்திராட்ச மாலையைப் போட்டிருக்கிறேன் தெரியுமா? இது தான் இப்ப நாகரீகம் இப்படி வேடம் போடுகிறவனுக்குத் தான் இப்ப காலம். உழைக்கிறவனை விடத் திருடுகிறவனும், ஏமாற்றுபவனும் தான் வசதியாக வாழ்கின்றான்." நாங்களும் காலத்திற்குத் தகுந்தாற் போல மாற வேணும். இல்லை என்றால் காலம் நம்மை ஏமாற்றி விடும்" என்று பூனை தனது எண்ணத்தை மெதுவாக வெளியிடத் தொடங்கியது. குரங்கிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன செய்வது என்று விளங்கவில்லை.
தான் பசியுடன் வந்த போது தன்னை
ஆதரித்து இருக்க இடம் தந்த பூனையை
எதிர்த்துக் கதைக்க முடியவில்லை.



இந்த நிலையைப்
பூனை பயன்படுத்திக் கொண்டது.
குரங்கைப்பார்த்து " சிநேகிதியே ஒன்றுக்
கும் யோசிக்க வேண்டாம். உனது
முடியைச் சீவிக் கொள், இந்தா திருநீர்
பூசிக் கொள் என்றது குரங்கும் அப்படியே
செய்தது. " ஓ.... உண்மையான...
பக்தனே உன்னிடம் தோற்றுவிடுவான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்லாயிருக்கு. இனி உன்னுடைய -
எதிர்காலம் நல்லாயிருக்கும்.. என்று
சொல்லித் தன்னுடைய திருட்டுத் -
தொழிலில் குரங்கையும் சேர்த்துக்கொண்
டது.

சிறிது நாட்கள்; மிகமிகச்
சந்தோசமாகப் போய்க் கொண்டிருந்தது
இருவரும் ஒரு நாள் ஒரு வீட்டில்
வெண்ணெய் திருடச் சென்றனர். வீட்டுக்
காரி சத்தம் கேட்டு ஓடி வந்தாள்.
பூனை தான் தப்பினால் போதும்
என ஓடி ஒளிந்து கொண்டது.

ஆனால் வெண்ணெய்ச்சட்டிக்
குள் காலை வைத்துக் கொண்ட
குரங்கினால் தப்பி ஓட முடியவில்லை
வீட்டுக்காரியிடம் நல்ல அடி வாங்கிக்
கொண்டது. காலை நொண்டி, நொண்டி
ஓடியது. அழுது கொண்டு ஓடியது -

www.tamilarangam.net

கிள்ளைப் பூனையின் சிநேகிதத்
தால் வந்த வினை. இது என்று
சொல்லிக் கொண்டு. இனிமேல் பூனையி
ன் சிநேகிதமும் வேண்டாம். வேடமும்
வேண்டாம் என்று வேறிடம் போனது

இக்கதையைச் சுருக்கமாகச் சொல்லி
உதவியவர் - செல்வி: பிங்கலை

பல மொழிகளில் மொழிபெயர்ப்புச்
செய்யப்பட்ட நூல் எது என்றால்
பைபிள் (வேதாகமம்) என்று தானே
சொல்லுகின்றார்கள்.? "யுனெஸ்கோ"
என்னும் நிறுவனத் தின் தகவலின்படி
லெனின் எழுதியநூல்கள் 370 மொழி
பெயர்ப்பிலும் அகதா கிறிஸ்டியின்
நாவல்கள் 216, வால்டிஸ்னி 203
பைபிள் 202 சேக்ஸ் பியர், டால்ஸ்ட
-ராய் சார்ள்ஸ் டிக்கன்ஸ், மார்க்சிம்
கார்க்கி 100 மொழிபெயர்ப்புக் களிலும்
வெளிவந்துள்ளன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தன்னலம்



ஒரு காட்டில் வாழ்ந்து வந்த கழுதையும் நரியும் ஒரு நாள் சந்தித்தன. ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்வது நல்லது என்று நரி, கழுதையிடம் சொன்னது. கழுதையும் அதை ஏற்றுக் கொண்டது. இருவரும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்வது என உறுதி கொண்டனர்.

ஒருநாள் நரியும் கழுதையும் காட்டு வழியே சென்று கொண்டிருந்தன. சிங்கம் வரும் சத்தம் கேட்டது. நரி; தான் தப்பி விட்டால் சரி என்ற முடிவுக்கு வந்தது. அதற்கு ஒரேஒரு வழி கழுதையைக் காட்டிக் கொடுப்பது என்று முடிவு செய்தது.

www.tamilarangam.net

கழுதையை பக்கத்தில்
இருந்த கிடங்கிற்குள் விழச் சொல்லி,
நரி, தான் பக்கத்தில் இருந்த செடி
மறைவில் பதுங்கியது. கழுதை தனது
நண்பன் நரியின் சொற்படி கிடங்கி
ற்குள் விழுந்தது.

சிங்கம் தன் அருகே
வர முன்னர் தான் போய்க் கழுதை
யைக் காட்டிக் கொடுத்து விட்டால்
தன் மீது சிங்கத்திற்கு நல்ல அபிப்
-பிராயம் ஏற்படும் என எண்ணிய
நரி சிங்கத்தின் முன்னே சென்றது.
"காட்டு ராசாவே வணக்கம்" என்று
குழைந்து நின்றது. காட்டிக் கொடுக்
கும் எல்லோருமே இப்படிக் குழைந்து
தான் நிற்பார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கராசாவே வணக்கம் நான்

இன்று நல்ல கழுதை இரைச்சி

கொண்டு வந்திருக்கின்றேன். வாருங்கள்

என சிங்கத்தைக் கூட்டிச் சென்று

கழுதை நிற்கும் இடங்களைக் காட்டியது.

சிங்கத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இடங்கிற்குள் நிற்கும் கழுதையை

எப்பவும் சாப்பிடலாம். ஆனால்?...

"வெளியில் நிற்கிற நரியை எப்பவும்

சாப்பிடலாம் என்று விடமுடியாதே"

என்று யோசித்தது சிங்கம்.

உடனே நரியின் மீது பாய்ந்து கடித்துச்

சாப்பிடத் தொடங்கியது.*

---

● அடக்கம் அணைத்து விட்டால்: மீண்டும் வருவதில்லை.

— எராசின்

---

- வழி -

தாய், அன்னை என்பன ஒரே கருத்துள்ள சொற்கள் என்றாலும், தாய் மொழி என்பதில் உள்ள தாக்கம். அன்னையர் மொழி என்பதில் குறைந்து விடுகின்றது.* 8

www.tamilarangam.net

## அட்டைப்படம் —

இம்மாதம் சரஸ்வதிபூசை நடைபெறும் மாதமாகும். கல்வித் தெய்வமான சரஸ்வதியை இந்துக்கள் பூசை செய்து வழிபடுவார்கள். எல்லா இன-மத மக்களும் கல்வித் தெய்வத்தை வழிபட்டு வருகின்றார்கள்.

செல்வங்களில் அழியாத செல்வமான கல்விச் செல்வம், எமது நாட்டில் அழிந்து கொண்டிருக்கின்றது. நாட்டைவிட்டு வெளியேறிய எம்மவர்கள் கல்விச் செல்வத்தை மறந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

கல்வித் தெய்வமான சரஸ்வதியிடம், "எமக்கு நல்ல கல்வியைத் தந்து, அது எமது தாய்நாட்டிற்கும் பயன்படக் கூடியதாய் அமையத் தா" என்று நாங்கள் இத்திருநாளில் பிரார்த்தனை செய்வோமாக.

---

கல்வித் தெய்வமான கலைமகள் சரஸ்வதியை அட்டைப்படத்திற்காக வரைந்து அனுப்பி உதவிய செல்வி ஹேமா செல்வராஜாவிற்கு எமது நன்றிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது வினாவிடைப் போட்டி

விடைகள் :

1 திருவள்ளுவர் 2. பாரதியார்

3. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள்

4. நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பில் ...

5. 247 எழுத்துக்கள்.

போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கடித உறையை ஒட்டி அனுப்பாமல் 60 pf முத்திரை செலவில் அனுப்பலாம் கடித உறையில் DRUCKSACHE என எழுதவேண்டும். அமுதம் சிறுவர் வட்டம் பகுதிக்கு உங்கள் பலரிட மிருந்து ஆதரவாக விண்ணப்பங்கள் வரும் என எதிர்பார்க்கிறோம்.

— ஆசிரியர் —

பரிசு வழங்கும் போது, அது நீண்ட காலத்திற்கு நினைவில் இருக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதனால் தான் நான் புத்தகத்தை எதிர்பார்க்கிறேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




முதலாவது வினா விடைப் போட்டியில் ஐந்தும் சரியான விடைகள் எழுதிய இருவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>நகைச்சுவைக் கதைகள்</u> பெறுபவர்
செல்வன் : சிவரூபன் - செல்வராஜா
DÜLTGENSTALER STR-65
5650 SOLINGEN-19

<u>மரியாதைராமன் கதைகள்</u>





பெறுபவர்:
செல்வி. ஜஸ்மின் ராஜ்குமார்
RÖNTGEN STR-6
5138 HEINSBERG-OBERBRUG

நாலு விடைகள் மட்டும் சரியாக எழுதிய
செல்வன் ஜீவகன் - தனபாலசிங்கம்
5138 HEINSBERG
செல்வி கோகில சக்தி - செல்வராஜா
5650 SOLINGEN
இருவருக்கும் அமுதம் ஆவணி இதழ் வழங்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# விடைகள்




சென்ற இதழில் செய்து பாருங்கள் இதை எனக் கேட்டிருந்தோம். இது தான் விடை. ஒவ்வொரு துண்டிலும் இரு எண்கள். இந்த ஒவ்வொரு இரு எண்களின் கூட்டுத்தொகையும் ஒரே எண்ணாக (13) வருகின்றது.

## விடுகதை விருந்து விடைகள்

1) அகப்பை, 2) அப்பிள் 3) இடியப்பம்
4) உயிர், 5) காளான்

பாராட்டுக்கு உரியவராக, ...விடுகதையில் இரண்டு சரியான விடைகள் எழுதிய செல்வி. தர்சினி : மதியாபரணம்

KURTEKOTTENSTR 159


5090 LEVERKUSEN-1 அவர்களுக்கு இம்மாத அமுதம் பரிசாக அனுப்பிவைத்துள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரிந்து கொள்ளுங்கள்



படம்
செல்வி. கரோலின்
பிரான்ஸிஸ்
4 வயது

"வெய்யில் என்ன மாதிரி எரிக்கிறது?"
"வெளியிலே தலை காட்டவே முடியவில்லை"
இந்த வசனங்கள் யூலை, ஆகஸ்ட் முற்பகுதிவரை.... எல்லோருடைய வாயில் இருந்தும் வெளி வந்தன வாகும்.

இன்னும் சில நாட்களில்
"ஐயையோ! விரே குளிராய் இருக்கிறதே" என்ற வசனங்களும் கேட்கத் தான்

[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுவர்களாகிய நீங்கள், ஏன் இப்படிக் காலங்கள் மாறுகின்றன எப்படி இவை நடைபெறுகின்றன - என அறிய ஆவலுடையவர்களாக இருப்பீர்கள்.


நீங்கள் வானத்தில் பல நட்சத்திரங்களைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? அவை சொல்ல முடியாத தூரத்தில் இருக்கின்றன. அவை எல்லாம் ஒவ்வொரு சூரியன்கள் தான்.! என்ன ஆச்சரியப் படுகின்றீர்களா? அப்படி என்றால்?.... சூரியனும் ஒரு நட்சத்திரம் தான் என்று சொல்லலாமா? எனக் கேட்கத் தானே போகின்றீர்கள்.

நீங்கள் ஆச்சரியப் பட்டதும் சரி. கேட்க நினைத்ததும் சரி. இந்தச் சூரியனைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியவை பல உண்டு. வானவெளியில் நிறைந்து கிடந்த . ஐதரசன் எனும் காற்றின் துகள்களினால் சூரியன் உருவானது.. நம் கண்ணுக்குத் தெரிவது

www.tamilarangam.net

போல அது கட்டியான (திடப்) பொருள் அல்ல. பல கொதிக்கின்ற வாயுக்களால் வெப்பத்தை வெளிவிடும் கோளமாக உள்ளது. சூரியனின் இயக்கத்தால் ஒன்பது கிரகங்கள் தோன்றின.

நாம் வாழும் பூமியும் சூரியனில் இருந்து தோன்றியது தான்.




சூரியனில் இருந்து தோன்றிய எல்லாக் கிரகங்களும் (கோள்கள்) தங்களைச் சுற்றியும், சூரியனையும் சுற்றி வருகின்றன. பூமியும் தன்னைச் சுற்றுவதால் இரவும் பகலும், சூரியனைச் சுற்றுவதால் வெய்யில் காலம், குளிர்காலம் போன்ற பருவகாலங்கள் ஏற்படுகின்றன.

www.tamilarangam.net

சூரியன் தனது குடும்
பத்தில் உள்ள ஒன்பது கிரகங்களையும்
இயக்குகின்றது. பூமி போன்ற உயிர்
இனங்கள் தாவரங்கள் வாழக்கூடிய
கிரகங்களில் அவற்றிற்குக் கட்டாய
தேவையாக சூரியன் உள்ளது.

சூரியனின் வெப்பம்
பூமியில் விழாவிட்டால் என்ன நடக்கும்
என நினைக்கின்றீர்கள்? "பூமிமுழுவதும்
இருட்டாக இருக்கும் அவ்வளவு தான்"
என்று தானே சொல்லப் போகின்றீர்கள்?

பூமி இருட்டாகவே இருக்கும்.
அதைவிட பூமியில் உள்ள கடல், ஆறு
குளம் போன்ற நீர் நிலைகள் எல்லாம்
ஐஸ் கட்டிகளாக மாறி விடும். செடி
கொடி தாவரங்கள் பட்டுப் போய்விடும்
மனிதன், மிருகங்கள் பறவைகள்
எல்லாம் அழிந்து விடும்.

என்ன பயமாக இருக்கிற
தா? இன்று உலகில் உள்ள வெடி

www.tamilarangam.net

குண்டுகள், பயங்கர அணுகுண்டுகள்
எல்லாம் வெடிக்கத் தொடங்கினால்,
அவற்றால் ஏற்படும் புகையினால்,
சூரியனின் கதிர்கள் பூமியில் விழ முடியா
த நிலை ஏற்படலாம் என்றும்,
சூரியனின் வெப்பம் பூமியில் விழா
விட்டால் என்னென்ன துயரங்கள்
நடை பெறுமோ? அவை எல்லாம்
நடை பெறலாம் என்று விஞ்ஞானிகள்
இன்று கவலைப் படுகின்றார்கள்.

பார்த்தீர்களா? சூரியன் நமக்கு
எவ்வளவு பயன் உள்ள தெய்வம் ஆக
இருக்கின்றது. எத்தனையோ உலகங்கள்
வாழ ஒளி பரப்பும் சூரியனின் உட்
பகுதி இருட்டாகவே இருக்கின்றதாம்.
இது பெரிய ஆச்சரியமாக இல்லையா?

சூரியனின் வெப்பத்தை
பைரோடலியோ என்ற கருவி மூலம்
அளக்க முடிகின்றது. சூரியனிலும் புயல்,
அதிர்ச்சி, நடுக்கம் என்பன ஏற்படுகின்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றன. ஆனால் அவற்றில் காந்த சக்தி இருக்கும்.

சூரியனுடைய வெப்பமே ஒரு சக்தி ஆகும். ஆனால் அந்தச் சக்தியிலிருந்து மின்சாரம் போன்றபல வகையான சக்திகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இரவிலும் சூரியவெப்பம் மின்சாரமாகப் பயன் படுகின்றது. சூரிய ஒளியில் இயங்கும் கடிகாரத்தையும், சூரிய ஒளியால் மணிக்கு 45கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் சைக்கிள் போன்ற வண்டியையும் மேற்கு ஜேர்மனி உருவாக்கியுள்ளது.

சூரிய வெப்பம் பட்டதும் ஐஸ்க் கட்டிகள் கரைந்து விடுகின்றன. ஆனால் சூரிய வெப்பத்தால் ஐஸ்க்கட்டிகளை உருவாக்கக் கூடிய கருவிகளை அவுஸ்திரேலியா உருவாக்கி உள்ளது.

செயற்கையாக ஒருசூரியனை உருவாக்கி, அதன் துணையால் புதிய


www.tamilarangam.net

பல கண்டுபிடிப்புக்களையும், அவற்றால் பல நன்மைகளையும் உலகம் காண-லாம் என நம்பப் படுகின்றது.

இந்த "டொகாமாக்" எனப்படும் செயற்கைச் சூரியன் விவகாரம் எந்த அளவிற்குச் செயற்படப் போகின்றதைப் பொறுத்திருந்து தான் பார்ப்போமே!

- ஆன்

- சுனாமி இல்லாத கடற்கரைகள் -



www.tamilarangam.net

# வினாவிடைப் போட்டி 3

1) சூரியனுக்கு மிக அண்மையில் (அருகில்) உள்ள கிரகம் எது?

2). மூன்று பக்கம் கடலாலும், ஒருபக்கம் தரையாலும் சூழப்பட்டிருப்பதைக் குடாநாடு என்று அழைப்பர். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கையை எவ்வாறு அழைப்பர்?

3). "கிழக்கின் சுவர்க்கம்" எனப் புகழப் பட்ட நாடு எது?

4). மத்திய கிழக்கில் ஒரு பெரிய நாடு ஒரு மிகச் சிறிய நாட்டை ஆயுத பலத்தால் தனதாக்கியுள்ளது. அந்த இரு நாடுகளும் எவை?

5). ஐரோப்பாவில் ஜேர்மன் மொழி (டொச்) பேசப்படும் நாடுகள் எவை? (குறைந்தது நாலு நாடுகளாவது)

விடைகள் 25/9/90க்கு முன்னர் அனுப்பப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதையும் - காரணமும்



— ஸ்ரீ

முன்னொரு காலத்தில்.. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் திடீரென கடும் சண்டை ஏற்பட்டது. இருபகுதியும் தங்கள் படைகளைத் திரட்டி முழுஅளவில் சண்டை செய்து கொண்டிருந்தன.

ஆனால் வௌவால்கள் மட்டும் எந்தப் பகுதியுடனும் சேராமல், "யார் வெற்றி பெறுகின்றார்களோ அவர் பக்கம் சேர்ந்திடுவோம்" என்று நினைத்துக் கொண்டிருந்தன.

சண்டையின் அரைப் பங்கு முதல் நாட்களில் பறவைகளே வெற்றி பெற்றுக் கொண்டிருந்தன. எனவே, பறவைகளின் பக்கம் போய்ச் சேர்ந்து கொள்வதே புத்திசாலித்தனம் என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவு செய்தன. பறவைகளின் இடத்திற்குச் சென்றன. பறவைகளின் அரசன் கழுகு வரவேற்றான். வெளவால்கள் தாம் பறவை என்றும் பறவைகளுடன் சேர்ந்து விலங்குகளை எதிர்த்துப் போரிடப் போவதாகவும் கூறின.

"நீங்கள் பறவைகளாக இருந்திருந்தால் சண்டை தொடங்கிய உடனேயே வந்திருப்பீர்கள். உங்களைப் பறவை என்று நம்பவே முடியவில்லை" என்று கழுகு சொன்னது.



www.tamilarangam.net

ஐய்யையோ! எங்களில் ஏன் சந்தேகப் படுகின்றீர்கள்? எங்களுக்கும் இறகுகள் இருக்கின்றன. நாங்களும் பறக்கின்றோமே?. எனச் சொல்லிப் பறந்து காட்டின. கிழுகு வௌவால்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டது.

ஆனால் அடுத்தடுத்த நாட்களின் சண்டையில் விலங்குகளின் பக்கமே வெற்றி வந்து கொண்டிருந்தது.

இதைக்கண்ட வௌவால்கள், ஐய்யையோ! அவசரப்பட்டுப் பறவைகளின் பக்கம் வந்துவிட்டோமே என்று மிகக் கவலைப்பட்டன. எப்படியும் விலங்குகளுடன் சேர்ந்து விடுவதே சிறந்தது; என்று முடிவு செய்தன. பறவைகளின் இடத்திலிருந்து களவாக விலங்குகளின் இடத்திற்குச் சென்றன.

வௌவால்கள் விலங்குகளின் அரசனான சிங்கத்திடம் நேரே சென்று தாம் விலங்குகள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் தம்மையும் படையில் சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டன.

"உங்களுக்கு இறகுகள் இருக்கின்றன. நீங்கள் பறக்கின்றீர்கள் நீங்கள் பறவைகளே! பறவைகளுக்கு எதிரான எமது சண்டையில் உங்களை எம்முடன் சேர்த்துக் கொள்ள நான் என்ன முட்டாளா? இங்கே நில்லாமல் ஓடி விடுங்கள் என்று சிங்கம் ஆத்திரப்பட்டது.

"இல்லை! இல்லை! நாங்கள் பறவைகள் போல முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதில்லையே! நாங்கள் விலங்குகள் தான்! அதனால் தானே குட்டி ஈன்று பாலூட்டுகின்றோம். பறவை என்றால் அப்படிச் செய்ய முடியுமா?, என்று எல்லா வெளவால் களும் கேட்டன.

www.tamilarangam.net

சிங்கம் வௌவால்களையும்
தம்முடன் சேர்த்துக் கொண்டது.
சில நாட்களின் பின்னர் சண்டை
நிறுத்தப்பட்டது. சமாதானப் பேச்சு-
வார்த்தை நடைபெற்றது. அதில் இனி
மேல் விலங்குகளும் பறவைகளும்
சண்டை செய்யாமல் சமாதானமாக
இணைந்து வாழ்வது என இருபகுதியா
லும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
அதன் பின்னர் விலங்குகளும், பறவைகளும்
சேர்ந்து ஒற்றுமையாக வாழத் தொடங்
கின.

இதனால் வௌவால்கள்
தமது ஏமாற்றுத் தனங்களை எண்ணி
வெட்கப்பட்டன. தமது ஏமாற்று
வேலையால் பறவைகள், விலங்குகள்
கண்ணில் பட அச்சப்பட்டன.
அன்று முதல் வௌவால்கள் பகலில்
வர வெட்கப்பட்டு, இரவில் எல்லாவித
மான விலங்குகளும் உறங்கிய பின்னர்
வெளியில் வருவதை வழமையாகச் செய்தன *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வௌவால்கள் பகலில் ஏன் வெளியில் வருவதில்லை? என்பதற்கு முந்திய கால மனிதர்கள் இப்படியான கதைகளைச் சொல்லி வந்திருக்கின்றார்கள். தவளை, கங்காரு போல வௌவாலும் ஒரு விந்தையான உயிர் இனம் ஆகும். நம்முடைய அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பலவற்றிற்கு இவ் வௌவால் பெரிதும் துணையாக இருந்திள்ளது.

பறவைகளின் படிப்படியான (பரிணாமம்) வளர்ச்சியே விலங்குகள் ஆகும். விலங்கு நிலைக்குத் தொடங்கிய வௌவால் முழு வளர்ச்சி பெறாமல் இப்படி ஆகிவிட்டது என அறிஞர் கருதுகின்றார்கள். அதனாலே அது பறவை போலப் பறக்கின்றது. விலங்கு போல குட்டி ஈன்று பால் ஊட்டு-

www.tamilarangam.net

கின்றது. வௌவால்கள் கூர்மையான செவிப்புலன் உடையவை. அதனால், அவற்றால் இலகுவில் இரவினில் பறக்க முடிகின்றது. இவை தொடர்ச்சியாக மனித செவியினால் உணர முடியாத (உல்ராசொனிக்) Ultra Sonic ஒலி அலைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்த ஒலிஅலைகளை ஏதாவது பொருள் தடைசெய்யுமானால் அவை புறப்பட்ட இடத்திற்கு உடனே வந்து விடக்கூடியன.

வௌவால் இருட்டில் பறப்பதற்கு அதன் செவிகளே பெரிதும் உதவுகின்றன. வௌவாலின் எதிரொலியை அடிப்படையாகக் கொண்டே கடலின் ஆழம் அறியும் SONAR (சோனார்) கண்டுபிடிக்கப்பட்டது. கடலில் நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளதா என்பதையும் இச் சோனார் முறைகொண்டே அறியப்படு-கின்றது **

www.tamilarangam.net



# ஏனழுதாய்!

குழ. கதிரேசன், B.A.,

மேகமே ஏனழுதாய்
மின்னலுனை அடித்ததுவோ?
வேகமாய்ப் பெருங்காற்று
வீசி உனை விரட்டியதோ?

இடிமேல் இடிவிழுந்து
இதயம் இடிந்ததுவோ?
துடியாய்த் துடிக்கும்உன்
துயரத்தைச் சொல்லியழு!

மலைமேல் ஏறுகையில்
மடுவில் விழுந்தாயோ?
நிலவை விளையாட
நீயழைத்து மறுத்தாளோ?

தப்பாமல் பீரங்கி
தாவிஉனைத் தாக்கியதோ?
துப்பாக்கிக் குண்டுவந்து
துளையேதும் போட்டதுவோ?

www.tamilarangam.net

# புதிர்க்கதை

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது தனக்கு உதவியாளர்களாக கரடி, குரங்கு, முயல் என்பவற்றை வைத்துக் கொண்டது.

சிங்கத்திற்கு வருத்தம் வந்தது. முதுமை அடைந்தது. முன்னரைப் போல வேட்டை ஆடி மிருகங்களைப் பிடித்துச் சாப்பிட முடியவில்லை.

தன்னுடைய உதவியாளர்களை எப்படியாவது ஒரு காரணம் காட்டி அடித்துச் சாப்பிட வேண்டியது என்று முடிவு செய்தது.

சிங்கம், கரடியை அழைத்தது. "என்னுடைய வாய் எப்படி மணம் வீசுகின்றது என்பதை மணந்து பார்த்துச் சொல்லுமாறு கேட்டுத் தனது வாயை ஆவென்று திறந்து காட்டியது.

www.tamilarangam.net

சிங்கத்தின் கள்ளம் விளங்காத கரடியும், சிங்கத்தின் வாயை மணந்து பார்த்தது. சிங்கம் பச்சை இறைச்சி சாப்பிடுவதால் அதன் வாய் கெட்ட நாற்றம் வீசியது. கரடி மூக்கைப் பொத்திக் கொண்டு "அரசே சகிக்க முடியாத கெட்ட நாற்றமாய் இருக்கின்றது" என்றது.

'என்ன? எல்லோரும் மதிக்கின்ற என்னை அவமரியாதை செய்து விட்டாய். உனக்கு அவ்வளவு துணிச்சலா? என்று சொல்லிக்கொண்டு கரடியை அடித்துக் கொன்று தின்றது.



www.tamilarangam.net

அடுத்த நாள் குரங்கைக்
கூப்பிட்டது. "வாயின் மணத்தை
மணந்து பார்த்துச் சொல்லும் படி
கேட்டது. கரடிக்கு முதல் நாள்
நடந்தது குரங்கிற்குத் தெரியும்.
ஏன் வீண் பொல்லாப்பு? நறுமணமாக
இருப்பதாகச் சொல்லி விட்டால், தப்பித்து
க் கொள்ளலாம் என்று எண்ணியது.

'அரசே தங்களுடைய வாய்
ரோசாப் பூவைப் போல நல்ல மணம்
வீசுகின்றது" என்று குரங்கு சொல்லிய
து. "என்ன! பச்சை இறைச்சி தின்கிற
எனது வாய் நல்ல மணம் வீசுகிறதா?
நான் பல்லே விளக்குவதில்லை.
என்னுடைய வாய் எப்படி நறுமணம்
வீசும்? நீ பொய் சொல்கிறாய்!
இவ்வளவு நாளும் நீ உண்மையாக
நடந்து கொள்ளவில்லை என்று
தான் நினைக்கின்றேன். நான் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராசா எனக்கே நீ பொய் சொல்லி விட்டாய்! இதோ தண்டனை என்று குரங்கை அடித்துத் தின்றது.

அடுத்த நாள் வந்தது.

முயலைக் கூப்பிட்டு வாய் மணம் எப்படி இருக்கின்றது என்று மணந்து பார்த்துச் சொல்லும்படி சிங்கம் கேட்டது.

கூடாத மணம் என்று சொன்ன கரடிக்கும், நல்ல மணம் என்று சொன்ன குரங்கிற்கும் நடந்தவை முயலுக்குத் தெரியும். அது தந்திரமாக ஒரு பதிலைச் சொல்லித் தப்பிக் கொண்டது. அது சொன்ன பதில் என்ன என்பது தான் இம்மாதப் புதிராகும். இந்தப் புதிரைக் கண்டு பிடித்தவர்கள் 25.7.70 முன் எமக்கு எழுதி அனுப்புங்கள். கதைப் புத்தகம் பரிசாகக் கிடைக்க இருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுகதை விருந்து

1) உலகம் எல்லாம் திரிபவனை
ஒருத்தர் கூடக் கண்டதில்லையே!
அவன் யார்?

2) ஊசி மூக்கன் சந்தைக்குப் போனான்
அவன் யார்?

3) வாயில்லாமல் வார்த்தை சொல்வான்.
உயிரில்லாமல் ஊருக்குப் போவான்
கால் இல்லை வீட்டுக்கும் வருவான் அவன்யார்?

4) மூட்டையை அவிட்டால் முடிச்சு முடிச்சாக
வருகிறது. அது என்ன?

5) சிரித்தால் சிரிப்பான்: அழுதால் அழுவான்
அவன் யார்?

6. அவர், கழுத்தை வெட்டுவார்: கையை
வெட்டுவார்: ஆனால் இரத்தம் வராது
அவர்யார்:?

விடைகளை 25.09.90
முன்னர் அனுப்பிவையுங்கள்.

www.tamilarangam.net

# வினாவிடை 2

வினாவிடைப் போட்டி 2: விடைகள்

தை - பெயராகவும் வினையாகவும் வரும்

திருகோணமலை கிழக்கு மாகாணத்தில் உள்ளது

இலங்கையின் மிகநீளமான நதியின் பெயர் மகாவலிகங்கை ஆகும்

புதிய ஆத்திசூடியை இயற்றியவர் பாரதியார் ஆவார்

WM 90 இறுதிப் போட்டியில் ...
மேற்கு ஜேர்மனியும் ஆஜர்ண்டினாவும் கலந்து கொண்டன.

இலங்கையில் தமிழர்கள் வடமாகாணத்திலும், கிழக்கு (கீழ்) மாகாணத்திலும் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றார்கள்

---

சகலவிதமான ரேடியோ, ரிவி. மற்றும் மின்சாரத்தில் இயங்கும் பொருட்கள் திருத்த வேண்டி உள்ளதா? அமுதம் முகவரி
பயன் பெற்றுக் கொள்ளவும் [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ROMMERKIRCHEN என்னும் இடத்திலிருந்து, தரமான ஆக்கங்கள் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பெயர் முகவரி இல்லாமல் வந்ததால் பிரசுரம் ஆகவில்லை. அனுப்பியவர் பெயர் முகவரியுடன் எம்முடன் தொடர்பு கொள்க.




வினா விடைப் போட்டி 2 ல் 5 சரியான விடைகளையும் எழுதி, அதிஷ்ட சாலியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட . இருவரில்

செல்வி .டி. அருணகிரிநாதன்
ANDERENSE 3,
3590 BADWILDUNGEN

நவீனச் சிறுவர் கதைகளையும் .....

செல்வி . கோகுலசக்தி.(ஹேமா) செல்வராஜா
DÜLTGESTALER STR - 65
5650 SOLINGEN -19

பீர்பால் கதைகளையும் பெறுகின்றனர்.




சரியான விடைகளையும் நாலு, மூன்று விடைகளை யும் எழுதியஎல்லோருக் கும் எமது பாராட்டுக்கள்.

— அமுதம் —

www.tamilarangam.net

# கொல்ல வந்தவர்கள் வெட்டுண்டனர் !

ஒருமுறை தெனாலி இராமன் இராயரின் கடுங் கோபத்துக்கு ஆளாகினான்.

“இப்படிப்பட்ட முட்டாள்கள் உயிரோடு இருப்பதை விட இறப்பதே மேல்!” என்று கூறிய இராயர் தெனாலி இராமனைச் சிரச்சேதம் செய்யச் சொல்லி உத்தரவிட்டார்.

இராயரின் ஆணைப்படி இரண்டு கொலையாளிகள் உருவிய வாளுடன் தெனாலி இராமனை நோக்கி வந்தார்கள்.

“அரசே, நான் சாவதைப்பற்றி அஞ்சவில்லை. ஆனால், சாவதற்கு முன்னால் ஒரு வேண்டுகோள். இறப்பதற்கு முன்னால் கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு சூரிய நமஸ்காரம் செய்ய விரும்புகிறேன். என் தியானம் முடிந்து, நான் ‘வெட்டுங்கள்’ என்று சொன்னதும் இந்தக் கொலையாளிகள் என் தலையை வெட்டிவிடலாம்” என்றான், இராமன்.

“சரி அப்படியே செய்யுங்கள்!” என்று கொலையாளிகளுக்கு உத்தரவிட்டார் இராயர்.

கொலையாளிகள் இராமனை ஒரு குளத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இராமன் கழுத்தளவு நீரில் நின்று கொண்டான். அவனுடைய இரு பக்கத்திலும் இரண்டு கொலையாளிகளும் உருவிய வாட்களுடன் நின்று கொண்டிருந்தனர்.

தெனாலி இராமன் சூரிய பகவானை நோக்கி நெடுநேரம் தியானம் செய்து கொண்டிருந்தான்.

www.tamilarangam.net

எப்பொழுது அவன் "வெட்டுங்கள்" என்று சொல்லுவான் என்று இருவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரம் சென்றதும் "வெட்டுங்கள்" என்று கூறிய தெனாலி இராமன் சட்டென்று தண்ணீருக்குள் தலையை இழுத்துக் கொண்டான்.

"வெட்டுங்கள்" என்ற குரலைக் கேட்ட இரு கொலையாளிகளும் தங்கள் வாட்களை ஓங்கி வீசினர்.



தெனாலி இராமன் நடுவே இல்லாததால் இருவருடைய உடைவாட்களும் அவர்களுடைய கழுத்துக்களையே வெட்டிவிட்டன.

மீண்டும் கொலைத் தண்டனையிலிருந்து மீண்ட இராமன் சபைக்கு வந்தான்.

"இந்த முறை கொலையாளிகளை எப்படி ஏமாற்றிவிட்டு வந்தாய்?" என்று இராயர் கேட்டார்.

"அரசே, எனக்குத் தண்டனை கொடுக்கும்போது முட்டாள்கள் உயிரோடு இருப்பதைவிட இறப்பதே மேல்" என்றீர்கள். அதன்படி நம்மிடம் காவலர்களாக இருந்த இரண்டு முட்டாள்களை இறக்கும்படி செய்து விட்டேன்" என்றான் இராமன்.

www.tamilarangam.net

# AMUTHAM




## KINDERFREUNDLICH MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்